International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சங்க அகப்பாடல்களும் பாணர் பதிவுகளும்

**முனைவர் ப. கோமளா**
உதவிப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி
சென்னை - 30,
ORCiD: https://orcid.org/0009-0004-4146-0115
DOI: 10.5281/zenodo.16599327

**ஆய்வுச் சுருக்கம்**

பாணர் உள்ளிட்ட கலைஞர்களின் வாழ்வியல் குறித்த செய்திகள் பாட்டும் தொகையுமான அனைத்து நூல்களிலும் பேசப்பட்டிருக்கின்றது. அந்தவகையில் புறநானூற்றில் போர்க்களம் உள்ளிட்ட பகுதிகளில் வீரம் செறிந்த மறவர்களோடும், மன்னர்களோடும் அவர்கள் இடம்பெற்றுள்ள செய்திகளைப் பார்க்க முடிகின்றது. ஆற்றுப்படை நூல்களில் வள்ளல்களை நாடிச்சென்று பரிசுபெற்றுத் திரும்புதல், அதற்கு முன்பிருந்த பாணர்களின் வறுமை, பசியோடு பரிசிலரை நோக்கி வரும் பிற பாண சமூகத்திற்கு வழிகாட்டுதல் உள்ளிட்ட செய்திகள் இடம்பெற்றுள்ளன. அகநூல்களில் பாணர்களின் வறுமை நிலையையும் அதனால் அவர்கள் தலைவன், தலைவி உள்ளிட்டோருக்கு வாயில்களாக இருந்து செயற்பட்ட செய்திகளையும் பார்க்கமுடிகின்றது. இவ்வாறு சங்க இலக்கியத்தில் மூன்று நிலைகளில் காணப்படும் பாணர் வாழ்வியலை அகப்பாடல்களை மட்டும் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**Abstract**

Information regarding the lives of minstrels, including the Panar community, has been discussed in all the Sangam literature texts, both poetic and anthological. In this regard, in Purananuru, we can see accounts of their presence alongside valiant warriors and kings in various contexts, including the battlefield. The Attruppadai literature describes their journeys to seek patrons and receive gifts, their previous state of poverty, and their role in guiding other minstrels who approach patrons in search of sustenance. In the Akam literature, we find descriptions of the minstrels' impoverished condition and how they acted as intermediaries for the hero and heroine. This article focuses on the life of the Panar community as depicted in the Akam poems, examining this aspect of their lives as presented in Sangam literature.

அகத்தையும் புறத்தையும் அதிகமாய்ப் பேசியுள்ள சங்க இலக்கியங்களில் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலும் கலையைத் தம் வாழ்வாதாரமாகக் கொண்டு இயங்கிய பாணர்களின் வாழ்வியலும் குறிப்பிடத்தக்க அளவில் பாடப்பட்டுள்ளன. போர், வீரம், கொடை, செங்கோல் பற்றிப் பேசும் புற இலக்கியங்களிலும் தலைவன் தலைவியருக்கு

இடையே நிகழும் அக நிகழ்வுகளைச் சொல்லும் அக இலக்கியங்களிலும் இப்பாணர்கள் இடம்பெற்றுள்ளனர். புறத்தில் போர்க்களத்திலும் குறுநில மன்னரோடும் காணப்படும் இவர்கள், அகத்தில் தலைவன் தலைவியரின் ஊடலைத் தீர்க்கும் இணைப்புப் பாலமாக விளங்குகின்றனர். குறிப்பாகத் தலைவனுக்குத் துணையாகவும் அவன் துணைவியருக்குத் தூதுவர்களாகவும் விளங்குகின்றனர். சங்க இலக்கியங்களும் தமிழ்நாடும் பாணர்களுக் கெனத் தனி இடம் தந்துள்ளது. பதினெண் மேற்கணக்கு நூல்களான சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை எனும் இலக்கியச் சான்றுகளே இதற்கு ஆதாரம். மேலும், புறநானூறு அகநானூறு போன்ற வற்றிலும் பாணன் கூற்றாகப் பல பாடல்கள் காட்டப்பட்டுள்ளது. பக்தி இலக்கியங்களிலும் கூட சைவத்தில், நாயண்மார்களுள் ஒருவரான திருநீலகண்ட யாழ்ப்பாணரும், ஆழ்வார் களுள் ஒருவரான திருப்பாணாழ்வாரும் பக்தி இயக்கத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்தவர்கள். பாணர்கள் கலைகளுக்கெல் லாம் முன்னோடியாகத் திகந்ழ்ந்தவர்கள் என்றே (ஸ்ரீதேவி,பி.,ப.44) கூறலாம். இத்தகைய பாணர்கள் பற்றிய பதிவுகளை அகப்பாடல்களின் வழி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரும்பான்மையான பாணர்கள், வாயில்க ளாகவும் தூதுவர்களாகவும் சங்க அகப்பாடல் களில் கட்டமைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தலைவனோடு நெருங்கிய தொடர்பில் இருக்கின்றனர். அவன் பொருட்டுத் தலைவி யரிடம் தூது செல்கின்றனர். இதனால் பாணர்கள் தலைவியரின் வெறுபுக்கு ஆளாகின்றனர்.

புறப்பாடல்களில் போர்க்களத்திலும், அரசரின் அரண்மனைகளிலும் தம் இசைத் திறனைக் காட்டிப் பரிசு பெற்றுச் சென்றுள்ள இவர்கள், அகப்பாடல்களில் வாயில்களாகவும் தூதுவர் களாகவும் இருந்துத் துன்புறுகின்றனர், புறக்கணிக்கப் படுகின்றனர்.

வாயிலாகச் செல்லும் பாணர், புலையன் (நற்.68;85:22;95:10) என்றும் பாண் தொழிலுக்கு ஏலாதவன் (நற்.96:35) என்றும் தலைவி மற்றும் தோழியரால் அழைக்கப் படுவதை நற்றிணைப் பாடல்கள் சிலவற்றில் காணலாம். மேலும், பரத்தையர், காமக் கிழத்தியரை விரும்பித் தலைவியைப் பிரிந்தொழுகும் தலைவன் தன் இல் செல்ல விரும்புகின்றான். அதன் பொருட்டுத் தலைவியிடம் பாணர் வாயிலாகச் சென்றுள்ளனர். இதனால் இவர்கள் தலைவி யரின் கடுஞ்சொற்களையும் கோபத்தையும் எதிர்கொள்கின்றனர். பாணர்கள் தலைவனின் தலைவிக்கு மட்டும் வாயிலாகச் சென்றது மட்டுமன்றி தலைவனின் காதற் பரத்தைய ருக்கும் வாயிலாகச் சென்றுள்ளனர் (நற்.150: 10-11). சக பாணர்கள் இழிவுபடுத்தப்படும் காலத்திலேயே அந்தண வாயிலோனுக்குச் சிறந்த மரியாதை வழங்கப்பட்டுள்ளது (இராமச் சந்திரன், எஸ்.,ப.76) அறியத்தக்கது. இச்செய்தி சங்க காலத்திலேயே ஆரியர்களுக்கு இருந்த செல்வாக்கினை உணர்த்துகின்றது.

தலைவன் பாணனுக்குப் பொன்னும் பொருளும் வழங்கும் ஒரு முதலாளியாகத் விளங்கியிருக்கிறான். அவனுக்காகப் பாணர், தலைவியிடம் வாயிலாகச் சென்றுள்ளனர். இதனால் தலைவனுக்கும் பாணனுக்குமான நட்பு விரிசலின்றி செல்வதைப் பார்க்க முடிகின்றது.

### வள்ளல்களும் பாணரும்

குறுநில மன்னர்களும் வள்ளல்களும் பாணர் களுக்கும் அவர்களின் சுற்றங்களுக்கும் துணையாக இருந்துள்ளனர். பாணர்கள் கலையை மதித்து அவர்களுக்கு உரிய அங்கிகாரத்தை வழங்கிய வள்ளல்களில் எவ்வி என்ற மன்னனும் குறிப்பிடத் தக்கவ னாவான். அவன் பாணர்க்குப் பொற்பூ அளித்துப் புரந்துள்ளான். அவன் இறந்து பட்டதால் பாணர்கள் தம் யாழின் கோடுகளை முறித்து எறிந்துள்ளனர் (அகம்.115:8-10). தமக்குப் பரிசில் வழங்கிய மன்னன் இறந்து பட்டதால் பாணர் தம் இசைக் கருவிகளையே தூக்கியெறியத் துணிந்த செயலல் குறிப்பிடத்தக்கது.

அகுதை, விச்சியர் பெருமகன் போன்றோரும் பாணரை ஆதரித்துள்ளனர் (குறுந்.298:6-7,328:

5-8). அன்னி என்பவனின் புகழைப் பாணர் பாடியுள்ளனர் (அகம்.45:912). பாணரின் இசைப்புலமையை மதித்த திதியன், அவர்களுக்குப் பல பரிசுப் பொருட்களை வழங்கியுள்ளான் (அகம்.331:10-12). பெரிய மூங்கிலையுடைய குறுங் காட்டில் ஆராய்ந்து அறுத்தெடுத்த சிறிய கணுக்கள் கொண்ட நுண்ணிய கோலினையும் உடைய விறலியரோடு பாணரையும் பாதுகாப்பவனாக நன்னன் வேண்மான் இருந்துள்ளான் (அகம். 97:9-12). அவன் எதிரி நாட்டுப் போரில் வெற்றிபெற்று கவர்ந்து வந்த செல்வங்களைப் பாணர் சுற்றத்திற்கு வழங்கியுள்ளான் (அகம்.349). பாணர்க்கு அவர்கள் விரும்பியவாறு பரிசுகளை வழங்கியுள்ளான் அதிகன் (அகம்.162:17-18). பாண்டியனின் வெற்றியைப் பாணர் மத்தளம் முழக்கிக் கொண்டாடியுள்ளனர். அவன் வெற்றிபெறும் போதெல்லாம் பாணர்கள் பல களிறுகளைப் பரிசாகப் பெற்றுள்ளனர் (அகம்.106:10-13). நுண்மையான கோலையுடைய பாணரைப் பாதுகாத்தவன் தித்தன் வெளியன் எனப்படுகின்றான் (அகம்.152:3-4). பாணரின் புரவலன் எனப்படும் முசுண்டை, தன்னிடம் இரந்து வரும் பாணர்க்கு நாள்தோறும் மிகுந்த உணவினைக் கொடுத்து, பொன்னாலான பூணினைக் கொம்பிற் செருகி, பொன்னாற் செய்த மாலையைக் கழுத்தில் பூட்டி, சந்தனம் பூசப்பெற்ற அழகிய திமிலையுடைய காளையையும், அதோடு நீண்ட தேரையும், களிறையும் பரிசாக வழங்கியிருக்கிறான் (அகம்.249:1-10). இச்செய்திகள் பாணர்மீதும் அவர்களின் கலைமீதும் வள்ளல்கள் வைத்திருந்த மதிப்பினை வெளிப்படுத்துவதாய் உள்ளன. மேலும், “பாணர்கள் எளியவர்கள்; வறுமையாளர்கள். ஆயினும் அவர்களுக்கு வழங்கும் உணவில் எவ்விதமான குறையையும் வள்ளல் பெருமக்கள் வைப்பதில்லை. தாங்கள் உண்ணுகின்ற உணவை அல்லது அதற்கு நிகரான உணவைப் பாணர்களுக்கு வழங்குவார்கள் (சீ.ரேவதி, ப.8) என்பதையும் பல சங்கப் பாடல்களின் வழி அறியமுடிகிறது.

**பாணர் மன்னன்**

தமிழ்நாட்டின் வடதிசைக்கண் இருந்த ஒரு நாட்டைப் பாணன் ஒருவன் ஆண்டுள்ளான் (அகம்.113). மேலும், அவன் பகைவர் ஆக்களைப் பாதுகாத்து வாழும் மிக்க உணவினைக் கொண்ட அரண்களைச் சென்றடைந்து, திரண்ட திமிலையுடைய விடையோடு கூடிய பகைப் புலத்து ஆக்களைச் செவ்வி பார்த்துக் கவர்ந்து வருவான் என்கிறது அகநானூறு. வலிமிகு முன்பிற் பாணன் (அகம்.226:13), வடாஅது, நல்வேற் பாணன் (அகம்.325:16-17), பாணன், மல்லடு மார்பின் (அகம்.386:3-4) போன்ற சொற்கள் பாணனின் வலிமையை உணர்த்துவதாக உள்ளன. பாணர்கள் நாட்டை ஆளும் வல்லமை மிக்கவர்களாகவும், ஆநிரைகளைக் கவர்ந்து செல்லும் ஆற்றல் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர் என்பது இதனாற் புலப்படும். இதனை, பாணர் நாட்டினர் வாணர், வாணாதிராயர், வாணதரையர், என்றெல்லாம் பெயர்பெற்றுப் பின்னர் தமிழகமெங்கும் பரவியுள்ளனர். இதற்கான கல்வெட்டுச் சான்றுகள் வல்லம் கோயிலில் இருக்கின்றன” (பாலசுப்பிரமணியன், ச., ப. 186) என்னும் அறிஞர் இளங்குமரனின் கூற்று உறுதிபடுத்தும்.

**உணவும் பாணரும்**

செல்வம் படைத்த மன்னர் முதலானோர் பாணர்களை ஆதரித்த பொழுதிலும், பாணர்கள் பொருள் அடிப்படையில் பின்தங்கியுள்ளனர். பாணர்கள் வள்ளல், மன்னர் போன்றோரின் மூலம் வந்த வருவாயினை சுயநலமாகத் தனக்காகப் பயன்படுத்தாமல் தன்னைப் போன்றோர் அனைவருக்கும் பகிர்ந்தனர் (ரஜினி, மா., ப.142). இதனாலும் இவர்களின் வறுமைப் பிணி நீங்காமல் தொடர்ந்தது எனலாம். இவ்வாறு வறுமையுற்று வாடும் பாணரின் வாழ்க்கையில் உணவு முக்கிய இடம் பெறுகின்றது. அவர்களின் இசைப்பயணம் உண்ணும் உணவையும், உடுத்தும் உடையையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. பாணர்கள் பெற்ற உணவு குறித்த தகவல்கள் புறப் பாடல்களில் மிகுந்து காணப்படுகின்றன. ஆனால், அகப் பாடல்களில் அத்தகைய செய்திகள் அருகியே காணப்படுகின்றன. புறப் பாடல் களில் பாணன் அரசர்களோடும், மன்னர்களோடும்,

சீறூர் மன்னர்களோடும் தொடர்பு படுத்தப் படுகின்றான். ஆனால், அகப் பாடல்களில் மக்களோடு மக்களாக அவர்களுடன் கலந்து அவர்களின் குடும்ப சிக்கல்களைத் தீர்க்கும் ஒருவனாகச் செயல்படுகின்றான். மிக்க வலிமை பொருந்திய செந்தீயில் சுட்ட வளமான நிணத்தினது கொழுவிய துண்டங்கள் சொரியப் பெற்ற மெல்லிய தினைச் சோற்றினையும், காற்றில் நெற்கதிர்கள் சுழன்றாடும் வயலிடத்து விளைந்த கரும்பினது முற்றிய தண்டினைப் பிழிந்தெடுத்த சாறு காய்ச்சிய பாகுடன் பாலினையும் ஊற்றிக் கலந்த செந்நெல்லால் ஆன பசிய அவலையும் கலத்தின்கண் சொரிந்து, பாணர் முதலானோர்களுக்குப் பகுத்துக் கொடுக்கும் நீர் மோதுகின்ற மதகினையுடையது உறையூர் (அகம்.237:8-14) என்னும் குறிப்பினை அகநானூற்றுப் பாடலால் அறிய முடிகிறது.

**இசையும் பாணரும்**

இவர்கள், சங்க காலத்தில் வாழ்ந்த இசைக் கலை வாழ்க்கையர்கள் ஆவர். இவர்கள் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து, இசை பாடியும் கருவிகளை இசைத்தும் நாடகம் நடத்தியும் நடனம் ஆடிப் பாடியும் வாழ்ந்தவர்கள் (தங்கராசா கோபிநாத், ப.16). ஆகையால் பாடல்களிலும் இசை பற்றிய குறிப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. கூத்தர் சிறு வங்கியம், பெருவங்கியம் போன்ற பல வாத்தியங்களோடு பல ஊர்களிலும் சென்று கூத்தாடுவர். கூத்தாட்டம் முடிந்தவுடன் பையினுள் பல வாத்தியங்களையும் உள்ளிட்டு அதன் தலையினை சேர்த்துக் கட்டுவர். பின்னர், தம் மிகப்பெரிய சுற்றத்தோடு கூத்தாடிய இடத்தினின்றும் பெயர்ந்துச் செல்வர். அவ்வாறு அவர்கள் சென்ற பின் பொலிவிழந்துக் காணப்படும் கூத்தாட்டு மன்றங்களை மறுநாள் சென்று பார்த்த அவ்வூர் மக்கள் வருந்தியிருக்கின் றனர் (கலி.301:16-25). இச்செய்தி பாணர் களின் கலைக்கு மக்கள் மத்தியில் இருந்த வரவேற்பினைக் காட்டுவதாக உள்ளது.

**இசைக்கு மயங்கிய விலங்குகளும் பறவைகளும்**

இசையைக் கேட்பதற்குக் காதுகள் மட்டும் போதும். அதை எந்த உயிரும் உள்வாங்கி மகிழ்ச்சியடையும். இசையை இரசிப்பதில் மட்டும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பெரிய வேறுபாடு இருக்காது என்ற எண்ணத்தையே சங்க அகப் பாடல்களில் இடம்பெற்றிருக்கும் விலங்குகள் கேட்ட இசை குறித்த செய்திகள் உணர்த்துகின்றன. வழிச் செல்லும் பாணர்தம் வருத்தம் தீர சிறிது பொழுது யாழ் இசைக்க, அவ்விசையைக் கேட்டு ஓந்தி தன் வருத்தம் தீர்ந்து யாமரத்தின் மீது ஏறியுள்ளது (நற்.186: 5-7). கணந்துள் பறவை, பாலைநில வழியில் செல்லும் கூத்தர் வழிச் செல்லும் வருத்தம் புலப்படாவாறு திடீரென இசைக்கும் யாழிசையுடன் சேர்ந்து ஒத்து ஒலியெழுப்பி யுள்ளது (நற்.212:3-7). மலைப் பிளவில் தங்கியிருக்கும் அசுணம், அழகிய வண்டு களின் இசையை யாழோசை என்று கருதி செவிகொடுத்துக் கேட்டுள்ளது. தோட்டிக்கு அடங்காத யானை யாழ் இசையைக் கேட்டு அடங்கியுள்ளது (கலி.2:26-27). எனும் செய்திகள் பாணர்களின் இசைக்கு விலங்குகளும் விதிவிலக்கல்ல என்பதையே உணர்த்துகின்றன.

**பாணர் செய்த தொழில்**

பாணரில் சிலர் மீன்பிடித்தலைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இதனை,

**பாணர் பசுமீன் சொரிந்த மண்டை போல**
(குறுந்.169:4)

என்னும் குறுந்தொகைப் பாடல் குறிப்பினால் அறியலாம். இவர்கள் தாம் பிடித்த மீனை விற்று அதற்கு நிகராக அணிகலன்களைப் பெற்றுள்ளனர். பாண்மகள் தன் அண்ணன்மார் பிடித்து வந்து கொடுத்த மீனை ஊர்தோறும் கொண்டு போய் விற்றுள்ளாள். மீனுக்கு விலையாகப் பெற்ற காசில் கள் குடித்து இவர்கள் மகிழ்ந்துள்ளனர்.

**பாணரின் கடவுள் நம்பிக்கை**

பொருள்வயிற் பிரிந்த தலைவனை நினைந்து வருந்திய தலைவிக்காகக் கடவுளை வேண்டுகின்றான் பாணன் (110.அகம்.14:13-16). அவர்கள் தாம் செல்லும் வழியில்

இருக்கும் நடுகற்களை வணங்கிச் சென்று ள்ளனர் (மலைபடு.390-391). வருத்துகின்ற சினம் கொண்ட தெய்வத்தின் முன்பு அத்தெய்வத்தின் சினம் தணிய பாணர் சிறிய யாழின் நரம்பை இசைத்துள்ளனர் (நற்.189:3-4) என்னும் அகப்பாடல் செய்திகளால் பாணருக்கு இருந்த தெய்வ நம்பிக்கை புலப்படுகின்றது.

## முடிவாக

இசைக்கலையில் வல்லவர்களாகத் திகழ்ந்த பாணர், அக்கலை தவிர்த்த பிற பணிகளும் செய்துள்ளனர் என்பதை மேற்கண்ட சான்றுகளால் அறியலாம். குறிப்பாகத் தலைவன் தலைவியருக்கு இடையில் வாயில் களாக இருந்த நிகழ்வு பாணரின் வீழ்ச்சியால் ஏற்பட்டதா? அல்லது அவர்களில் ஒரு பகுதியினர் மேற்கொண்ட தொழிலா என்பது இங்கு சிந்திக்கத்தக்கது. மேலும், பாணர் களின் இசையை விரும்புபவர்களாகவும் அவர்களை அரவணைக்கக் கூடியவர்களாக வும் குறுநில மன்னர்களும் சில போர் வீரர்களும் இருந்துள்ளனர் என்பதைச் சங்க அகப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது. உணவு, உடையை மையமிட்டே இவர்களது வாழ்க்கை நகர்ந்துள்ளது. ஆகையால் இவர்கள் பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலையினை அறிந்துகொள்ள முடியவில்லை. சிலர் பாணர் மன்னர்களாகவும் போர் வீரர்களாகவும் இருந்துள்ளனர். இதனால் அவர்களுக்கு இருந்த மக்கள் செல்வாக்கி னையும் போர்க்குணத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இவர்கள், தம்மைச் சார்ந்த பாணர் சமூகத்திற்கு உதவிக்கரம் நீட்டினார்களா? என்ற செய்தியி னையும் அறிந்துகொள்ள முடியவில்லை. மேலும், பாணர்கள் பயணத்தின் போதும் தன் தலைவன் தலைவியின் பொருட்டும் இறைவனை வழிபட்டுள்ளனர். இவர்கள், ஒருவித அச்சத்தின் காரணமாகவே இறை வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

## நூல்கள், கட்டுரைகள்

* இராமச்சந்திரன், எஸ்., மறையும் மறையவர்கள் முதலிய ஆய்வுக் கட்டுரைகள், எனி இந்தியன் பதிப்பகம், 2007.
* இளங்குமரன், இரா., பாணர், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1989.
* காந்திதாசன், முனைவர் க., சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 2011.
* தங்கராசா கோபிநாத், சங்க கால இசையில் பாணர்களின் பங்களிப்பு, ஆய்த எழுத்து, பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், அக்டோபர், 2018.
* பத்துப்பாட்டு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
* எட்டுத்தொகை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
* பாலசுப்பிரமணியன், ச., புறத்துறையில் பாணர்கள், சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், மலர் 2, இதழ் 3, சனவரி 2018.
* ரஜினி, மா., சங்ககாலப் பாணர்களும் அவர்தம் இசைக்கருவிகளும், அரிமா நோக்கு, Vol-17, No. 4, October-December 2023.
* ரேவதி, சீ., சங்ககாலப் பாணர்களின் இனக்குழு உணவியல், வரலாறு.காம்., இதழ் 183, ஏப்ரல், 2025.
* ஸ்ரீதேவி, பி., பாணர்களின் வாழ்வியல் பண்பாட்டுப் படிமலர்ச்சி, International Research Journal of Tamil (சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்), Vol – 4, Iss. Spl 1 Year 2022.